[3rd November 1966

மாநில பனைவெல்ல கூட்டுறவு சங்கம்

*376 கேள்வி.—திரு. நா. சௌந்தரபாண்டியன்: கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னை மாநில பனைவெல்ல கூட்டுறவு சங்கத்திற்கு கற்கண்டு நிலையம் அமைக்க திருச்செந்தூரில் எவ்வளவு நிலம் வாங்கப்பட்டது?

(இ) அந்த இடத்தை யாராவது ஆக்ரமித்திருக்கிறார்களா?

(உ) ஆமெனில், அந்த நபரை வெளியேற்ற எடுத்த நடவடிக்கைகள் யாவை?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார்:

(அ) சென்னை மாநில பனைவெல்ல கூட்டுறவு சங்கம் திருச்செந்தூர் தாலூகாவிலுள்ள வீரபாண்டியபட்டணத்தில் 1.86 ஏக்கர் நிலத்தை தேசிய பனங்கற்கண்டு ஆராய்ச்சி—பயிற்சி நிலையத்திற்காக கிரயத்திற்கு வாங்கியுள்ளது.

(இ) ஆம்.

(உ) சென்னை மாநில கூட்டுறவு சங்கம் ஆக்கிரமிப்பாளரை வெளி நடத்த அரசாங்க வக்கீலைக் கலந்து சட்டப்படி நடவடிக்கை எடுத்துக்கொண்டுள்ளது. இதற்கிடையில் ஆக்ரமிப்பாளர் தனிப்பட்ட முறையில் பேச்சுவார்த்தை நடத்தித் தீர்வுகாண விழைந்துள்ளனர்.

திரு. நா. சௌந்தரபாண்டியன்: அந்த நிலத்தை ஆக்கிரமித்தது யார்?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார்: எஜுகேஷனல் இன்ஸ்டிட்டியூஷன். அந்தக் கமிட்டி அங்கத்தினர்கள், சேர்மன் எல்லாம் அங்கத்தினருக்குத் தெரியும். திரு. ஆதித்தன் அவர்களுடைய இன்ஸ்டிட்யூஷன் அது.

திரு. கே. டி. கோசல்ராம்: இந்த ஆக்கிரமிப்பு எவ்வளவு காலமாக நடந்திருக்கிறது? வருஷக்கணக்கில் இதை எவிக்ட் செய்யாமல் இருப்பதற்குக் காரணம் என்ன?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார்: விளக்கமாகச் சொன்னேன். அவர்களை அப்புறப்படுத்தவேண்டுமென்று அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் எடுத்துக் கொண்டிருந்த சமயத்தில், அவர்கள் நேரிடையாக ஸ்டேட் பனைவெல்ல சங்கத் தலைவர் அவர்களுக்கும் அந்த சங்கத்திற்கும் எழுதிக் கேட்டிருந்தார்கள். பிறகு நேரடியாக இப்போது பேசி வருகிறார்கள்.

திரு. கே. டி. கோசல்ராம்: பேச்சு வார்த்தை முறிந்து விட்டது என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார்: இங்குள்ள தகவல்படி முறிந்து விட்டதாக இல்லை.

3rd November 1966]

திரு. கே. டி. கோசல்ராம் : நான் ஊரிலிருந்து வருகிறேன். பேச்சுவார்த்தை முறிந்துவிட்டது. உடனடியாக காலி செய்வார்களா?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : கனம் அங்கத்தினருக்கு நேரடியாகத் தெரிந்திருக்கலாம். என்னிடம் அத்தகவல் இல்லை.

திரு. நா. சௌந்தரபாண்டியன் : இந்த ஆக்கிரமிப்பு நடத்தும் போது கூட்டுறவு சங்கம் அதில் தலையிட்டு ஆக்கிரமிப்பு கூடாது என்று ஏதாவது தகவல் கொடுத்ததுண்டா?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : விளக்கமான விவரம் வேண்டுமென்ருல் தனிக் கேள்வி வேண்டும்.

திரு. டி. கார்ச்சா கவுடர் : சர்க்கார் நிலத்தை ஆக்கிரமிப்பு செய்பவர்களிடம் தனிப்பட்ட முறையில் பேச்சுவார்த்தை நடக்கிறது என்பது கொள்கை பூர்வமான விஷயம். இது சரிதாஞ என்பதைத் தெரிவிக்கவேண்டும்.

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : இந்த இடத்திற்குப் பதில் வேறு ஒரு இடம் கொடுக்கிறேன் என்ற முறையில் ஏதோ பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருக்கிறது.

திரு. கோ. சி. மணி : இந்த ஆக்கிரமிப்பை காலி செய்வதற்கு நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டது ரெவின்யூ டிப்பார்ட்மென்டா அல்லது கூட்டுறவு இலாகாவா? பேச்சுவார்த்தை நடத்தியது எந்த இலாகா?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : அந்த விவரங்கள் பற்றி என்னிடம் தகவல் இல்லை. தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்கிறேன்.

திரு. ப. உ. சண்முகம் : இதுபோன்று தனிப்பட்டவர்கள் ஒரு இடத்தை ஆக்கிரமிப்பு செய்து விட்டு அதற்குப் பதிலாக வேறு ஒரு இடத்தைக் கொடுக்கிறேன் என்று சொன்னல் அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்த தயாராயிருக்குமா ?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : இது அரசாங்க இடம் என்ற அளவில் வரவில்லை. மாநில பனைவெல்ல கூட்டுறவு சங்கத்தை சார்ந்தவர்கள்தான் வாங்கி வைத்திருந்தார்கள். அந்தக் கேள்விக்கு பதில் சொல்லவேண்டிய அவசியமில்லை.

திரு. நா. சௌந்தரபாண்டியன் : ஏழை விவசாயி ஐந்து அல்லது ஆறு சென்ட் நிலத்தை ஆக்கிரமித்தால் உடனடியாக காலி செய்ய தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. இது மிக விலை உயர்ந்த இடம். ஆக்கிரமித்திருப்பவர்கள் பணக்காரர்கள். அரசாங்கம் உடனடியாக காலி செய்ய தக்க நடவடிக்கைகள் எடுப்பார்களா?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : மாநில பனைவெல்லச் சங்கத்தைச் சார்ந்த இடம். திருப்பிக் கொடுப்பது பற்றிப் பேசிக் கொண்டிருக்கிருர்கள்; மறுத்தார்கள் என்று சொன்னுல் என்ன செய்ய முடியும் என்று பிறகு பார்க்கலாம்.

திரு. கே. டி. கோசல்ராம் : இது கொள்கை சம்பந்தப்பட்ட கேள்வி. இந்த என்க்ரோச்மென்டைக் காலி செய்வதற்கு ரெவின்யூ இலாகா நடவடிக்கை எடுக்கவேண்டுமா அல்லது கூட்டுறவு இலாகா நடவடிக்கை எடுக்க வேண்டுமா என்பது ஒரு கேள்வி. இந்த மாதிரி ஆக்கிரமித்துக் கொண்டால் தனிப்பட்ட முறையில் பேசுவதற்கு இந்த அரசாங்கத்தில் விதிகள் இருக்கின்றனவா? விதிகள் இருந்தால் அது மற்றவர்களுக்கும் அப்ளிகபிள் ஆக இருக்குமா?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : இதற்கெல்லாம் தனியாகக் கேள்வி போட்டால் விவரமாகச் சொல்ல முடியும்.

ரயில்வே செஸ் நிதி

* 377 **கேள்வி.—திரு. ம. கமலநாதன் :** கனம் தலநிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்திற்கு, 1961-ம் ஆண்டு ரெயில்வே செஸ் நிதியின் கீழ் ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு?

(இ) அதை செலவு செய்யும் விதம்பற்றி அரசினர் ஏதேனும் ஆணையிட்டிருக்கின்றனரா?

(உ) அதன்படி செலவழிக்கப்பட்டதா?

(எ) இல்லையெனில், தர்மபுரி மாவட்டத்திற்கேற்ற பங்கினை பிரித்துக் கொடுக்க அரசினர் ஏற்பாடு செய்யும் உத்தேசமுண்டா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : (அ) ரூ. 25,57,001.

(இ) ஆம். ரெயில்வே செஸ் நிதியிலிருந்து முதற் பொறுப்பாக தொடக்கப்பள்ளிகள் கட்டுவதற்கும் பின்னர் தாய் சேய் நல விடுதிகள், மருந்தகங்கள் கட்டுவதற்கும் செலவிடவேண்டுமென முடிவு செய்யப்பட்டுள்ளது.

(உ) இல்லை.

(எ) இதை சேலம் கலெக்டர் கவனித்து வருகிருர்.

திரு. ம. கமலநாதன் : மருத்துவக் கல்லூரிக் கட்டடம் கட்டுவதற்காக இந்த 25 லட்சம் ரூபாயைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று சேலம் மாவட்ட அபிவிருத்தி மன்றக் கூட்டம் 1961-ல் தீர்மானம் போட்டு அரசினருடன் தொடர்பு கொண்டது. இது வரை அரசினரிடமிருந்து எந்தவிதமான தகவலும் வரவில்லை. சென்ற பட்ஜெட் கூட்டத்தில் இதைப் பற்றிக் கேட்டபோது, கனம் முதலமைச்சர் அவர்கள், 'கடைத் தேங்காயை எடுத்து வழிப் பிள்ளையாருக்கு உடைக்க முடியாது; அந்தத் தொகை எதற்குப்